[1987 ஏப்ரல் 7

சமையல் எண்ணெய்களுக்கு ஒருமுனை வரி விதித்தல்.

331—(*வினா எண் 8236) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலை எண்ணெய், ரிபைண்டு ஆயில், தேங்காய் எண்ணெய் போன்றவைகளுக்கு ஒருமுனை வரி விதிக்கும் திட்டம் அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ). 17—3—1986 முதல் கடலை எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய், தேங்காய் எண்ணெய் போன்ற தாவர எண்ணெய்களுக்கு இம்மாநிலத்தில் முதல் விற்பனை முனையில் 4 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்பட்டு, இன்றைய தினம் நடைமுறையிலே இருந்து வருகிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒருமுனை வரி விதித்து இருப்பதாகச் சொன்னார்கள். மிக்க நன்றி. தேங்காய் எண்ணெய்க்கு ஒருமுனை வரி இருக்கிறது. ஆனால் தேங்காய்க்கு வரி கிடையாது. கடலை எண்ணெய்க்கு ஒருமுனை வரி என்னும்போது, கடலைப் பருப்புக்கு வரி இருக்கிறது. ஏதாவது ஒன்றுக்கு—கடலைப் பருப்புக்கு வரி இருந்தால், கடலை எண்ணெய்க்கு வரி நீக்கப்படுமா என்பதை கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் அது பற்றி விவரம் சொல்லப்படும்.

மாநில வணிகவரி ஆலோசனைக் குழு.

332—(*வினா எண் 11211) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வணிகவரி ஆலோசனைக் குழு எப்போது கூட்டப்பட்டது?

(ஆ) அதன் பரிந்துரைகளில் அரசு ஏற்றுக்கொண்டவை எவை?